ட

ஓம் குஹாய நம



திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 24 | விகாரி ஆண்டு மார்கழித் திங்கள் டிசம்பர்-1959 | இதழ் 9

திருப்புகழ்

திருவாவினன்குடி—பழநி

புடவிக் கணிதுகி லெனவள ரந்தக்
 கடலெட் டையுமற குடிமுநி யெண்கட்
 புநிதச் சததள நிலைகொள்ச யம்புச் சதுர்வேதன்
புரமட் டெரியெழ விழிகனல் சிந்திக்
 கடினத் தோடுசில சிறுநகை கொண்டற்
 புதகர்த் தரகர பரசிவ லிங்கத் தனிமூவர்

இடசித் தமுநிறை தெளிவுற வும்போற்
 செவியுட் பிரணவ ரகசிய மன்புற்
 றிடவுற் பனமொழி யுரைசெய் குழந்தைக் குருநாதா
எதிருற் றசுரர்கள் படைகொடு சண்டைக்
 கிடம்வைத் திடஅவர் குலமுழு தும்பட்
 டிடவுக் கிரமோடு வெகுளிகள் பொங்கக் கிரியாவும்

பொடிபட் டுதிரவும் விரிவுறு மண்டச்
 சுவர்விட் டதிரவு முகடுகி ழிந்தப்
 புறமப் பரவெளி கிடுகிடெ னுஞ்சத் தமுமாகப்
பொருதுக் கையிலுள அயில்நிண முண்கக்
 குருதிப் புனலெழு கடலினு மிஞ்சப்
 புரவிக் கனமயில் நடவிடும் விந்தைக் குமரேசா

யடியிற் பெருமித தகவுயர் செம்பொற்
கிரியைத் தனிவ்லம் வரஅர ணந்தப்
பலனைக் கரிமுகன் வசமரு ளும்போற் பதனாலே

பரன்வெட் கிடவுள மிகவும்வே குண்டடக்
கனியைத் தரவிலை யெனஅருள் செந்திற்
பழநிச் சிவகிரி தனிலுறை கந்தப் பெருமாளே.

பதவுரை

புடவிக்கு அணிதுகில் என=பூமிக்கு அழகிய ஆடை என்று கூறும் படி, வளர் அந்த கடல் எட்டையும் அற குடி முநி = பரந்துள்ள அந்த எட்டுத் திசைகளிலும் உள்ள சமுத்திரத்தை முழுவதும் குடித்த முனிவராகிய அகத்தியர், எண்கண் = எட்டுக் கண்களையுடையவரும், புநித சததள நிலைகொள் = தூய்மையான நூற்றிதழ்த் தாமரைக் கமலத்தில் நிலையாக இருப்பவரும், சயம்பு=பிரமதேவரும், சதுர் வேதன் = நான்கு வேதங்களில் வல்லவருமாகிய நான்முகக் கடவுள், புரம் அட்டு எரி எழ= முப்புரங்களும் அழிந்து தீப்பிடிக்கும்படி, விழி கனல் சிந்தி = நெற்றிக் கண்ணின் தீயைச் சிதறி, கடினத்தொடு சில சிறு நகை கொண்ட = வன்மையுடன் சிறிது புன்னகை புரிந்த, அற்புத கர்த்த = அற்புதத் தலைவரும், அரகர=பாவங்களை நீக்குபவரும், பரசிவன்=பெரிய மங்கல மூர்த்தியுமாகிய சிவபெருமான், இந்தத் தனி மூவர்இட=இந்த ஒப்பற்ற மூவர்களுடைய, சித்தமும் நிறை தெளிவுற = உள்ளம் நிறைந்து தெளிவுறும் வண்ணம், பொன் செவியுள் = அழகிய செவியுள், பிரணவ ரகசியம்=ஓம் என்ற ஒரு மொழிப் பொருளின் உட்கிடையை, அன்பு உற்றிட = அன்புகொள்ளுமாறு, உற்பன மொழி உரைசெய் = (உமது திருவாக்கிலிருந்து) தோன்றிய உபதேச மொழியைக் கூறிய, குழந்தை குருநாதா = இளங் குருநாதரே! எதிர் உற்று அசுரர்கள் = அசுரர்கள் எதிர்த்து வந்து, படைகொடு சண்டைக்கு இடம் வைத்திட=போருக்கு இடங் கொடுத்து நின்றதனால், அவர் குலமுழுதும் பட்டிட = அவர்களுடைய குலம் முழுவதும் அழியுமாறு, உக்கிரமொடு வெகுளிகள் பொங்க = வேகமாகக் கோபம் மீறவும், கிரி யாவும் பொடிபட்டு உதிரவும் = மலைகள் யாவும் பொடியாகி உதிரவும், விரிவு உறு அண்ட சுவர் விட்டு அதிரவும் = விரிந்த அண்டச் சுவர்கள் பிளவுபட்டு அதிர்ச்சியடையவும், முகடு கிழிந்து = அண்டத்தின் உச்சி கிழிபட்டு, அப்புறம் அப்பரவெளி கிடுகிடு எனும் சத்தமும் ஆக = அதற்கு அப்பாலுள்ள ஆகாய வெளியெல்லாம் கிடுகிடு என்று ஒலியுண்டாகுமாறும், பொருது= போர் செய்து, கையில் உள அயில் நிணம் உண்க=திருக்கரத்தில் விளங்கும் வேலாயுதம் பகைவருடைய கொழுப்பை யுண்ணவும், குருதி புனல் எழுகடலினும் மிஞ்ச = உதிர நீர் ஏழு சமுத்திரத்திலும் மிகுதியாகப்

புரண்டு ஓடவும், புரவி கன மயில் நடவிடும் = குதிரையான பருத்த மயிலை நடத்திய, விந்தை குமர ஈசா = அற்புதம் நிறைந்த குமாரக் கடவுளே! படியில் பெருமித தகவு உயர் = பூமியில் மேன்மையும் தகுதியும் மிகுந்த, செம்பொன் கிரியை = செம்பொன் மலையாகிய மேரு கிரியை, தனி வலம்வர = தனித்து நீர் வலமாகவர, அந்த பலனை = அந்தப் பழத்தை, கரிமுகன் வசம் அருளும் பொற்பு அதனாலே = யானை முகமுடைய விநாயகர் கரத்தில் தந்த தன்மையினால், பரன் வெட்கிட = சிவபெருமான் நாணுமாறு, உளம் மிகவும் வெகுண்டு = திருவுள்ளத்தில் மிக்க கோபங்கொண்டு, அ கனியை தரவிலை என = அப்பழத்தைத் தரவில்லை யென்று, அருள் செந்தில் = அருள் நிறைந்த திருச்செந்தூரிலும், பழநி சிவகிரி தனில்உறை = பழநிமலை யென்கின்ற சிவகிரியின் மீதிலும் எழுந்தருளியுள்ள, கந்த பெருமாளே = கந்தக் கடவுளாகிய பெருமிதம் உடையவரே!

பொழிப்புரை

பூமிக்கு அழகிய ஆடையாகப் பரந்துள்ள அந்த எண்திசையின் கடலை முழுதும் குடித்த அகத்தியர், எட்டுக் கண்களை யுடையவரும், தூய நூறு இதழ்களைக் கொண்ட தாமரையில் வீற்றிருப்பவரும், நான்கு வேதங்களில் வல்லவருமாகிய பிரமதேவர், முப்புரங்கள் அழித்து தீப்பிடிக்குமாறு நெற்றிக் கண்ணிலிருந்து அனல் சிந்தி வன்மையுடன் சிறிது சிறு நகைபுரிந்த அற்புதத் தலைவராகிய பாவத்தைத் தீர்க்கும் பரம சிவ மூர்த்தி என்ற இந்த ஒப்பற்ற மூவர்களின் உள்ளம் நிறைந்து தெளிவு அடைய அழகிய செவியில் பிரணவ மந்திரத்தின் இரகசியத்தை அன்போடு தோன்றிய மொழியை உரை செய்த குழந்தைக் குருநாதரே! எதிர்ப்பட்டு அசுரர்கள் படையோடு போருக்கு இடம் வைக்க, அவருடைய குலம் முழுவதும் அழியுமாறும், வேகமாகக் கோபம் பொங்கவும், மலை முழுவதும் தூள்பட்டு உதிரவும், பரந்த அண்டச் சுவர்கள் பிளவுபட்டு அதிர்ச்சியடையவும், அண்டத்தின் உச்சி கிழியவும், அதற்கு அப்பாலுள்ள பெரிய ஆகாயத்தில் கிடுகிடு என்று ஒலியுண்டாகுமாறும், போர் புரிந்து, திருக்கரத்தில் 'உள்ள வேலாயுதமானது அசுரரது கொழுப்பையுண்ணவும், உதிர நீர் ஏழு சமுத்திரத்திலும் மிகுதியாகப் பெருகி ஓடவும், மயிலாகிய பருத்த புரவியை நடாத்திய அதிசயமுடைய குமாரக் கடவுளே! பூதலத்தில் பெருமையும் தகுதியும் உடைய செம்பொன் மேரு மலையைத் தனியே தேவரீர் வலம் வந்தபொழுது, சிவபெருமான் அந்தப் பழத்தை விநாயகரிடந் தந்த காரணத்தினால், அப்பரமன் நாணுமாறு மனம் மிகவுஞ் சினமுற்று, அப் பழத்தைத் தரவில்லை என்ற காரணத்தினால், அருள் நிறைந்த திருச்செந்தூரிலும், பழநிச் சிவகிரியிலும் வீற்றிருக்கின்ற கந்தக் கடவுளே! பெருமிதம் உடையவரே!

விரிவுரை

புடவிக் கணிதுகிலென வளரந்தக் கடலெட்டையுமற குடி முனி:—

இந்திரனுடைய பகைவனுகிய விருத்திராசுரன் இந்திரனுடன் போரிட்டு, அஞ்சி, கடலில் ஒளிந்தனன். இந்திரனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி அகத்திய முனிவர், தமது தவ வலிமையால், கடலைச் சுருக்கி கரத்தில் எடுத்து ஆசமனம் புரிவதுபோல் குடித்துவிட்டார். கடலை ஒரு கையால் எடுத்துக் குடிக்கும் அளவுக்கு அவருடைய தவத்தின் ஆற்றல் உயர்ந்திருந்தது.

கடல் பூமிக்கு ஆடைபோல் அழகு செய்கின்றது. எட்டுத் திசைகளிலும் உள்ள கடல் என்பதைக் குறிப்பிடும்படி எண் கடல் என்றார்,

தனி மூவர்:—

அகத்தியர், பிரமதேவர், சிவமூர்த்தி இந்த ஒப்பற்ற மூவருக்கும் முருகப் பெருமான் பிரணவப் பொருளின் இரகசியத்தை உபதேசித்தருளினர்.

உற்பன மொழி:—

உற்பனம் – தோற்றம். முருகப்பெருமானுடைய திருமுகத்திலிருந்து தோன்றிய சொல். குழந்தைக் குருநாதனுகிய முருகவேள் தெளிவாகவும் உள்ளம் நிறைவு பெறவும் உபதேசித்தனர்.

செம்பொற்கிரியைத் தனிவலம்வர ... .
பழநிச்சிவகிரி தனிலுறை கந்த:—

இந்த 7, 8 அடிகளில் பழநித் தலபுராண வரலாற்றினைக் கூறுகின்றார்.

நாரத முனிவர் ஒரு சமயம் பெருந்தவம் புரிந்தனர். அத்தவத்துக்கு இரங்கிய பிரமதேவர் ஒரு மாதுளங்கனியைத் தந்தனர். அக்கனியை நாரதமுனிவர் சிவபெருமானுடைய திருவடியில் வைத்து வணங்கினர்,

விநாயகமூர்த்தியும் முருகமூர்த்தியும் பிதா மாதாக்களை வணங்கி அக் கனியைக் கேட்டார்கள். ''அகில வுலகங்களையும் ஒரு நொடிப் பொழுதில் வலம் வந்தவர்க்கு இக் கனி தரப்படும்'' என்று கூறி யருளினர்.

முருகவேள் மயில்வாகனத்தின்மீது ஊர்ந்து அகில வுலகங்களையும் ஒரு நொடிப்பொழுதில் வலம்வந்தார்,

விநாயகப் பெருமான் அகில வுலகங்களும் சிவத்துக்குள் அடங்கி நிற்றலால் சிவமூர்த்தியை வலம்வந்தார். "தேவரீருக்கு அன்னியமாக உலகம் இல்லையே" என்று கூறி வணங்கினர். பரமசிவம் விநாயகருக்குப் பழத்தைத் தந்தருளினர்.

உலகங்களை வலம் வந்த வடிவேற் பெருமான், தனக்குக் கனி தராமையால் வெகுள்வார்போல் வெகுண்டு சிவகிரியில் மேற்றிசை நோக்கித் தண்டாயுதபாணியாக நின்றார்.

சிவமூர்த்தியும் உமாதேவியாரும் கணங்கள் புடை சூழச் சென்று முருகவேளை எடுத்து அணைத்து, "கண்மணி! அரும்பு - சரியை; மலர்-கிரியை; காய்-யோகம்; பழம்-ஞானம். நீ ஞான பண்டிதன். ஞானமாகிய பழம் நீதான். பழம் நீ" என்றார். அதனால் அப்பதிக்குப் பழநி என நாமம் ஏற்பட்டது.

'ஆகமம் விளைத்தகில லோகமு நொடிப்பளவில்
ஆசையொடு சுற்றுமதி வேகக் காரனும்' —திருவகுப்பு.

இந்த வரலாற்றின் உட்பொருள்

(1) கணேசமூர்த்தி கந்தமூர்த்தி என்ற இருவரும் கனி கேட்டபோது சிவபெருமான் அப் பழத்தைப் பிளந்து பாதி பாதியாகத் தரலாம்.

(2) மற்றொரு பழத்தை உண்டாக்கிக் கொடுத்திருக்கலாம்.

(3) எல்லா உலகங்களையும் ஒரு நொடிப்பொழுதில் வலம்வரும் ஆற்றல் வல்லமைக் கணபதிக்கும் உண்டு.

(4) உலகங்கள் யாவும் சிவத்துக்குள் ஒடுங்கி யிருக்கின்றன என்ற உண்மையை ஞானபண்டிதனை முருகவேளும் அறிவார்.

ஆகவே இவ்வரலாற்றின் உள்ளுறைதான் யாது? சிவத்துக்கு இரு தன்மைகள் உண்டு. ஒன்று எல்லாவற்றிலும் சிவம் தங்கி யிருக்கின்றது, மற்றொன்று எல்லாம் சிவத்துள் ஒடுங்கி நிற்கின்றன.

இந்த இரு கடவுள் தன்மைகளையும் உலகவர் உணர்ந்து உய்யும்பொருட்டு, விநாயகர் சிவத்துக்குள் எல்லாவற்றையும் பார்த்தார்.

முருகர் எல்லாப் பொருள்களிலும் சிவத்தைப் பார்த்தார்.

இதனையே தாயுமானர் முதல் பாடலில் கூறுகின்றார்.

"அங்கிங்கெனாதபடி எங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது"

இது எங்கும் நிறைந்த தன்மை.

"தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது"

இது எல்லாம் சிவத்துக்குள் அடங்குந் தன்மை.

இந்த அரிய தத்துவத்தை இவ் வரலாறு நமக்கு உணர்த்து கின்றது. இந்த இனிய கருத்தை நன்கு சிந்தித்துத் தெளிக.

கருத்துரை

இப் பாடல் துதிமயமானது.

(திருவாவினன்குடி-பழநி)

ஆதா ளிகள்புரி கோலா கலவிழி
யாலே யமுதெனு மொழியாலே
ஆழ்சீ ரிளநகை யாலே துடியிடை
யாலே மணமலி குழலாலே
சூதா ரிளமுலை யாலே யழகிய
தோடா ரிருகுழை யதனாலே
சோரா மயல்தரு மானா ருறவிடர்
சூழா வகையருள் புரிவாயே
போதா ரிருகழல் சூழா ததுதொழில்
பூணா தெதிருற மதியாதே
போரா டியஅதி சூரா பொறுபொறு
போகா தெனஅடு திறலோனே
வேதா வுடனெடு மாலா னவரறி
யாதா ரருளிய குமரேசா
வீரா புரிவரு கோவே பழநியுள்
வேலா இமையவர் பெருமாளே.

பதவுரை

போது ஆர் = மலர்கள் நிறைந்த, இரு கழல் சூழாது = இரு திருவடிகளைச் சிந்தியாமலும், அது தொழில் பூணாது = அத் திருவடிக்குரிய நற்பணியை மேற்கொள்ளாமலும், எதிரே வர மதியாதே = திரு முன் வருவதற்குச் சிந்தியாமலும், போராடிய = போர் செய்கின்ற, அதி

சூரா = அதிசூரபன்மனே! பொறு பொறு = சற்றுப் பொறு பொறு, போகாது என = பின்வாங்கிப் போகாமல் நில் என்று கூறி, அடு திற லோனே = அவனை அழித்த வலிமை யுடையவரே! வேதா உடன் = பிரமதேவனும், நெடுமாலானவன் = நீண்ட திருமாலும், அறியாதார் அருளிய = அறிதற்கரியராய் நின்ற சிவபெருமான் பெற்றருளிய, குமர ஈசா! = குமாரக் கடவுளே! வீராபுரிவரு கோவே = வீராபுரியில் எழுந் தருளியுள்ள தலைவரே! பழநிஉள் வேலா = பழநியம்பதியில் உறையும் வேலாயுதரே! இமையவர் பெருமாளே = தேவர்கள் போற்றும் பெருமை யிற் சிறந்தவரே! ஆதாளிகள் புரி = வீம்பு வார்த்தைகள் பேசும் பொது மாதர்கள் காட்டும், கோலாகல விழியாலே = ஆடம்பரமுடைய கண் களாலும், அமுது எனும் மொழியாலே = அமிர்தம் போன்ற சொற்க ளாலும், ஆழ் சீர் இளநகையாலே = ஆழமான அழகிய இளஞ் சிரிப்பி னாலும், துடி இடையாலே = உடுக்கை போன்ற இடையாலும், மணமலி குழலாலும் = வாசனை நிறைந்த கூந்தலாலும், சூது ஆர் இளமுலை யாலே = சூதாடு கருவி போன்ற இளந் தனங்களாலும், அழகிய தோடு ஆர் இருகுழை அதனாலே = அழகான தோடு அணிந்த இரண்டு செவி களாலும், சோரா மயல்தரும் = சோர்ந்து போம்படி மயக்கந் தருகின்ற, மானார் உறவு = மாதர்களுடைய உறவினால் வரும், இடர் சூழாவகை = துன்பம் அடியேனைச் சூழ்ந்து வருத்தா வண்ணம், அருள்புரிவாயே = அருள்புரிவீர்.

பொழிப்புரை

மலர்கள் நிறைந்த உமது இரு சரணாரவிந்தங்களைச் சிந்தி யாமலும் அத் திருவடிக்குரிய திருப்பணியை மேற்கொள்ளாம லும், எதிர் வருவதற்கு யோசியாமலும் போர் புரிந்த, வலிமை மிகுந்த சூரபன்மனே! பின்வாங்காமல் சற்று பொறு பொறு என்று கூறி அவனை அழித்த ஆற்றலுடையவரே! பிரமதேவரும், நீண்ட திருமாலும் அடி முடி யறியாதவராகி நின்ற சிவபெரு மான் பெற்றருளிய குமாரமூர்த்தியே! வீராபுரியில் எழுந்தருளி யுள்ள தலைவரே! பழநியில் மேவும் வேலாயுதக் கடவுளே! தேவர்கள் போற்றும் பெருமிதம் உடையவரே! வீம்பு வார்த்தை கள் பேசும் பொது மாதர்கள் காட்டும் ஆடம்பர முடைய கண்களாலும், அமுதம் போன்ற சொற்களாலும், ஆழ்ந்த அழ கிய புன் சிரிப்பாலும் உடுக்கை போன்ற இடையினாலும், வாசனை நிறைந்த கூந்தலாலும், சூதாடு கருவிபோன்ற இளந் தனங்களாலும் அழகிய தோடு அணிந்த இரண்டு செவிகளாலும் அறிவு சோர்ந்து போம்படி மயக்குகின்ற பொது மாதருடைய உறவினால் வரும் துன்பம் அடியேனுக்கு எய்தா வண்ணம் அருள்புரிவீர்.

விரிவுரை

ஆதாளிகள்:—

ஆதாளி—வீம்புப் பேச்சு.

பயனில்லாத வெறும் வார்த்தைகளைப் பேசி அரிய நேரத்தை அவமே கழிப்பது பேதைமைத்தனம். பயனில்லாத சொற்களைச் சொல்லுபவன் மனிதர்களிற் பதர் போன்றவன்.

பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். — திருக்குறள்.

அருணகிரிநாத சுவாமிகள் இந்த ஆதாளி என்ற சொல்லைப் பல இடங்களில் எடுத்து ஆளுகின்றார்.

"அகதியை மறவனை ஆதாளி வாயனை" —திருப்புகழ்.

"ஆதாளியை யொன் றறியேனை அறத்
தீதாளியை யாண்டது செப்புமதோ" —கந்தரநுபூதி.

கோலாகல விழி:—

பொதுமகளிர் ஆடவர்களாகிய பட்சிகளைப் பிடிக்கின்ற வலைபோல் கண்களைப் பயன்படுத்துவார்கள். கண்களை மை யெழுதி மிக்க ஆடம்பரமாக அழகு செய்வார்கள்.

கோலாகலம்—ஆடம்பரம்.

அமுதெனு மொழியாலே:—

அமுதம்போல் குளிச்சியாகப் பேசி ஆடவரிடம் இருந்து மிகுந்த பொருளைப் பறிப்பர். ஆகவே அவர்கட்கு விழியும் மொழியும் இன்றியமையாதவை.

ஆழ் சீர் இளநகையாலே:—

அம்மகளிர் ஆடவரைக் கண்டு அழகாகப் புன்முறுவல் புரிவார்கள். அதில் ஆழமான கருத்துக்கள் உண்டு.

துடியிடையாலே:—

துடி – உடுக்கை; உடுக்கைபோல் நடுவில் சுருங்கிய இடை பெண்களுக்கு மிகுந்த அழகைத் தரும்.

மணமலி குழலாலே:—

குழலில் வாசனை நிறைந்த மலர்களை முடிப்பதனால், கூந்தல் கமகம என்று நல்ல வாசனையுடன் ஆடவருடைய உள்ளத்தை ஈர்க்கும் திறனுடன் திகழும்.

இருகுழை:—

குழை என்ற சொல்லுக்குக் காது என்ற ஒரு பொருளும் உண்டு.

"அவனி பெறுந் தோட்டம் பொற்குழை" —திருப்புகழ்.

சோரா மயல் தரு மானுர்:—

உடம்பு தளர்ச்சியடையுமாறு செய்வதுடன் உணர்வுந் தளர்ச்சியுறுமாறு மையலைத் தருபவர். அறிவு சோர்ந்தவர் எந்தத் தீவினையும் செய்யப் பின்வாங்க மாட்டார். கள் மயக்கம் உண்டார்க்கே தீங்கு பயப்பது. காம மயக்கங் கண்டார்க்குந் தீமை பயப்பது.

மாத்யதீ ப்ரமதாம் த்ருஷ்ட்வா ஸுராம்பீத்வாச மாத்யதீ
தஸ்மாத் த்ருஷ்டி விஷாம்நாரீம் தூரதః பரிவர்ஜயேத்
—நாரத பரிவ்ராஜகம்.

போதார் இருகழல் சூழாது:—

அடியார்கள் அர்ச்சித்த மலர்கள் முருகப் பெருமானுடைய திருவடிகளில் நிறைந்திருக்கின்றன.

அடியார்கள் மிக்க அன்புடன் முருகனை அர்ச்சிக்கின்றார்கள்.

"அப்படி பத்தி பழுத்த மனத்தினர்
அர்ச்சனை மெச்சிய செச்சை மணிப்புயன்" —திருவகுப்பு.

பிறவிப் பெருங்கடலுக்குத் தோணியாகிய முருகன் பாதாரவிந்தத்தை நினைத்து உருகவேண்டும். சூரபன்மன் ஆணவத்தால் நினையாது நிமிர்ந்து நின்றான்.

அது தொழில் பூணுது:—

நமக்கு ஆண்டவன் இருகரங்களைக் கொடுத்திருக்கின்றார். கைகள் உண்பதற்கு மட்டும் அமைந்தனவன்று. குரங்குகள் கூட கையால் உணவு உண்கின்றன. இந்தக் கையால் திருத்தொண்டுகள் புரிதல் வேண்டும்.

"கரே தஸ்யக்ருத்யம்" என்கின்றார் ஆதிசங்கரர்.

"எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க" என்பது திருவெம்பாவை.

"பூக்கை கொண்டரன் பொன்னடி போற்றிலார்" என்பார் திருமூலர். திருத்தொண்டு புரியாத கை கையாகாது. உலக்கை என ஆன்றோர் இகழ்வர்.

"பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்"
—பிரமோத்திரகாண்டம்.

கையில்லாமலேயே பறவைகளும் விலங்குகளும் வயிற்றை நிரப்புகின்றன, நமக்கு எட்டு சாண் நீளமுள்ள கைகள் கேவலம் வயிற்றை நிரப்புவதற்கு மட்டும் அமைந்ததன்று. இனிய திருத்தொண்டுகள் புரிதல் வேண்டும் அதுதான் கை படைத்ததன் நோக்கம்.

எதிருற மதியாதே:—

அகிலாண்டகோடிப் பிரமாண்ட நாயகனுகிய இளம்பூரணன் திருமுன் நாம் போவது நம் ஆற்றலுக்கு ஏற்றதன்று என்று சூரபன்மன் கருதினனில்லை.

செந்தழலைப் பஞ்சு எதிர்த்தது போலும், சண்டமாருதத்தைச் சிறு துரும்பு எதிர்த்ததுபோலும் சூரபன்மன் வரம்பிலா ஆற்றலுடைய வடிவேற்பரமனை எதிர்த்துப் போர்புரிந்தான்.

போராடிய அதி சூரா பொறுபொறு போகாதென அடு திறலோனே:—

சூரபன்மன் முருகவேள் திருமுன் நின்று போரிட்டு இரண்டாம் நாள் தோற்றுவிட்டுப் போனன். மீளவும் ஏழாம்நாள் போருக்கு வந்தான். முருகப்பெருமான், "அடே சூரபன்மனே! ஓடாமலும் ஒளியாமலும் புறங்காட்டாமலும் சிறிது தைரியத்துடன் நில். பொறு. பொறு" என்று கூறியருளினுர்.

ஆணவ மலம் ஒருபோதும் அழியாது. வன்மை குன்றியடங்கும். சூரிய ஒளிமுன் நட்சத்திரம் அடங்குதல்போல் என அறிக. எனவே ஆணவ மலமாகிய சூரபன்மன் வலிகுன்றி நின்று அருள் பெற்றுன்.

"மாயையின் மகனுமன்றே வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்"

—கந்தபுராணம்.

வேதாவுடன் நெடுமாலா ணவரறி யாதாரருளிய குமரேசா:—

மாலும் அயனும் அடிமுடியைக் காணவேண்டி ஆராய்ச்சியால் முயன்றுர்கள், நான் என்ற முனைப்பு ஏற்பட்டதனுல் விலங்கும் பறவையுமாக ஆனுர்கள், பலகாலும் தேடித் தேடித் திகைத்து மயங்கி ஏங்கி நின்றுர்கள்.

தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாரும் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும் துதித்துய்ந்தபடி விரிப்பார்.

—பெரியபுராணம்.

இறைவனை அன்பினுல் அகங்குழைந்து உருகி வழிபட்டால் எளிமையாகக் காணலாம்.

இக் கருத்தினை அடியில் வரும் திருப்பாடலால் அறிக.

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறவேன்

பைந்தமிழும் பாவையரும்

நமது தமிழகத்தில் தமிழ்மொழியை ஆடவர்கள் மட்டுங் கற்றுக் கவி பாடினுர்கள் என்று கருதவேண்டாம். பெண்மணி களிலும் பலர் நன்கு மொழி பயின்று, பல்கலே கற்று இனிய கனியமுதம் போன்ற பாடல்களைப் பாடி யுள்ளார்கள்.

திரு அயோத்தியில் வாழ்ந்த பெண்மணிகளைப் பற்றிக் கம்ப நாடர் கூறுகின்றுர்,

பெருந்தடங்கண் பிறைநுதலார்க் கெலாம்
பொருந்து கல்வியும் செல்வமும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே.

சற்று ஏறக்குறைய 2000 யாண்டுகளுக்கு முன் சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார், பாரி மகளிர், ஆதி மந்தியார், பூதப் பாண்டியன் தேவியார், காக்கைபாடினியார், பொன் முடியார், நப்பசலேயார், ஒக்கூர் மாசாத்தியார், காவற்பெண்டு, குற மகள் இளவெயினி, முதலிய தமிழன்னேகள் அக்காலத்தில் மிக வுயர்ந்த அறிவுக் கருவூலங்களாக விளங்கினுர்கள். அவர்கள் வீடும் நாடும் உயரப் பாடிய பாடல்கள் இன்றும் குன்றுபோல் குன்ருதிருக்கின்றன.

(முன்பக்கத் தொடர்ச்சி)

முன்ன மாலறியா ஒருவனும் இருவா
முக்கணு நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

—திருவிசைப்பா.

"திருமால் பிரமா அறியாதவர்சீர்
சிறுவா"

—திருப்புகழ்.

வீராபுரி:—

அருணகிரிநாதருடைய அரிய நண்பராகிய கவிசைச் சேவக ஞர் என்ற முருகபக்தர் வீரை என்ற ஊரில் பழநியாண்டவர் திருவுருவத்தை எழுந்தருளப் புரிந்து வழிபட்டார். அதனுல் பழநியுடன் சேர்த்து வீராபுரியையும் சுவாமிகள் பாடுகின்றுர்.

கருத்துரை

சூரனே யடக்கிய தீரமூர்த்தியே! பழநிமேவும் பரமனே! மாதர் உறவால் வருந் துயர் களைந்து ஆட்கொள்ளுவீர்,

புலி வாழ்ந்த குகை

ஒரு சிறு ஊரில் கூரைவேய்ந்த குடிசை. அதில் பழுத்த பழமாக ஒரு கிழவி காலை நீட்டிக்கொண்டு அமர்ந்திருந்தாள். அவள் தலை நடுங்கிக்கொண்டிருந்தது. ஆனால் உள்ளத்தில் நடுக்கம் இல்லை. உடல் தளர்ந்தும் அவளுடைய உள்ளந் தளரவில்லை. ஏதோ ஒன்றைச் சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

அடுத்த வீட்டுப் பெண் அக் குடிசைக்கு வந்தாள். கிழவிக்கு அருகில் இருந்த ஒரு சிறிய தூணைப் பற்றிக்கொண்டு நின்றாள். "பாட்டி! சாப்பாடு முடிந்ததா? தன்னந்தனியே இருக்கின்றனையே! எங்கே உனது மகன்? பல நாள்களாகவே பார்க்கவில்லை" என்று கேட்டாள்.

"அம்மா! அவனைப்பற்றி எனக்கு என்ன கவலை? அவன் உத்தமபுத்திரன்; வீண்வேலைக்குப் போகமாட்டான். நற்குண சீலன்; வீரகுமாரன்; ஆகவே அவன் ஏதோ ஒரு நற்கருமத்தில் ஈடுபட்டிருப்பான். நாடு நலமுறப் பாடுபடும் நன்மகன். வீட்டில் வயிறு புடைக்கத் தின்றுவிட்டு தூங்கும் சோம்பேறி யல்லன். அவன் ஒரு போர்த்திறம் பூண்ட புலி. புலி வேட்டைக்குச் சென்றால் புலி வாழ்ந்த குகை கவலைப்படுமா? குகைதான் உடன் செல்லுமா? என் மகனாகிய புலி வாழ்ந்த குகை என் வயிறு. புலி திரும்பி குகைக்கு வருந்தானே. அவனை நீ இப்போதே காண வேண்டுமாயின் அமர்க்களம் சென்றால் காணலாம்" என்றாள் அந்த மறக்கிழவி.

இவ்வாறு அவள் கூறிய வீர வுரைகளைச் செய்யுளாகச் சமைத்துத் தந்தாள் காவற் பெண்டு என்ற புலமை நிறைந்த பூவை.

இதோ பாருங்கள், அந்தப் பாடல் எத்துணை அருமையாக அமைந்துளது என்பதை.

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுளனோ? என வினவுதி என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன்; ஓரும்
புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.—புறநானூறு 86.

ஆனந்தக்கண்ணீர்

கொக்குபோல் நரைத்த தலைமயிரையுடைய ஒரு கிழவி, தனது வீட்டின் தலைவாசலில் அமர்ந்து, போர்க்களம் புகுந்த வீரமைந்தன் வரும் வழிமேல் விழிவைத்து இமைக்காது பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் முகத்தில் நல்ல ஒளி வீசிக்கொண்டிருந்தது. ஆழ்ந்த கண்போல் ஆழ்ந்த யோசனையிலிருந்தாள்.

போர் முடிந்து போர் வீரர்கள் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். ஆனால் தனது அருமருந்தன்ன ஒரு மகன் திரும்பவில்லை. வீரரை நோக்கி "என்மகன் எங்கே"? என்று வினவினாள்.

"அம்மா! அவ் வீரப் புதல்வன் போரில் அஞ்சாது அமர்புரிந்தான். பல யானைகளை எதிர்த்துக் கொன்றான். மாற்றார் விட்ட வேல் மார்பில் பட்டு மாண்டான்" என்று அவர்கள் விடை கூறினார்கள்.

தாய்க்கிழவி கேட்டாள். அவள் முகத்தில் வாட்டம் உண்டாகவில்லை. பெற்ற வயிறு பற்றி யெரியவில்லை மலர்ந்த முகமலரில் விரிந்த கண்களில் இருந்து மூங்கில் நிறைந்த பழமையான வெதிர மலையில் பெய்த மழைத் துளிகளினும் மிகுதியாக நீர் சிந்தியது. ஆனால் அது அழுகண்ணீர் அன்று; ஆனந்தக் கண்ணீர்.

இப்போது பழைய நிகழ்ச்சிகளை ஓவியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்கள். இந்தப் படங்கள் சிறிது காலத்தில் தேய்ந்துபோம். சில காலந்தான் பார்க்கத் தக்கதாக இருக்கும். முற்காலத்தில் காவியமாகப் படம் பிடித்துக் காட்டும் வழக்கம் இருந்தது. அக் கவி ஒருபோதுந் தேயாது. எக் காலத்திலும் பார்த்துக்கொண்டே யிருக்கத் தக்கது.

பூங்கண் உத்திரையார் என்று ஒரு பெண் புலவர் இருந்தார். உத்திர நாளில் பிறந்தவர் அவர். மலர் போன்ற கண்களையுடையவர். அதனால் உலகவர் பூங்கண்உத்திரையார் என அழைத்தார்கள். இம்மாதரசி, கிழவி தன் மகன் வீரக்களத்தில் வீர மரணம் எய்தினன் என்று செவிமடுத்து சிந்தை கலங்காது பெற்ற நாளினும் பெரு மகிழ்ச்சியால் ஆனந்தக் கண்ணீர் மழையெனப் பெய்த பெற்றியை ஒரு கவியால் படம் பிடித்துத் தந்தனர். அதுதான் இது.

மீன்உண் கொக்கின் தூவியன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள்; "சிறுவன்
களிறு எறிந்து பட்டனன்" என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே. —புறநானூறு.277

[தூவி - கொக்கின் சிறகு. வால் நரை கூந்தல் – தூய வெளுத்த தலைமயிர், நோன் கழை துயல்வரும் – வலிய மூங்கில்கள் அசையும்; வெதிரம் – வெதிரமலை. சிதர் – மழைத்துளி.]

மரணமெல்லாம் மரணமாகாது. மரணம் சில சமயத்தில் வாழ்வு ஆகும்; பிறருக்கு உதவி செய்யும் பொருட்டு உயிர்

கொடுத்த மரணம் தியாகத்தின் சிகரம்; நாட்டு நலத்துக்காக உயிர் வழங்கியது வீரமரணம்.

திருவள்ளுவர் கூறுகின்றார்.

> புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
> இரந்துகோள் தக்க துடைத்து.

தன்னை ஆதரித்தவர் "அந்தோ! உத்தமன் மறைந்தானே என்று கூறிக் கண்ணீர் விடும்வகையில் ஒருவனுக்கு மரணம் வருமாயின், அம் மரணத்தை யாசித்தும் பெறவேண்டும். அது அத்துணை உயர்வுடையது என்பது இதன் பொருள்.

> உற்றுழி உதவி செய்வோர் உலப்புறு தெவையும் ஈவோர்
> அற்றமில் தவத்தா றுற்றோர் அமர்புரி வீரர் ஆவோர்
> மற்றொரு பொருளும் வெஃகார் வருத்தமும் ஓரார்; ஆவி
> இற்றிட வரினும் எண்ணார் இனிதென மகிழ்வர் அன்றே,

என்பது கந்தபுராணத் திருவாக்கு.

எது கடன்?

வீடு உயர்ந்தால்தான் நாடு உயரும். வீடு உயர்வது என்றால் மூன்றடுக்கு நான்கு அடுக்குக் கட்டி வீட்டை உயர்த்துவது அன்று. வீட்டில் உள்ளவர்கள் உயர்தல் வேண்டும். உள்ளம் உயர்தல் வேண்டும். கடமை யுணராதிருத்தல் மடமை. வீடுகள் பல கூடினால் நாடு. ஆகவே வீட்டுநலமே நாட்டுநலம்.

தாயின் கடன்

நல்ல உத்தமமான பிள்ளைகளை ஈன்று தருதல் தாயின் கடமை.

> "கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
> எச்சமற்று ஏமாந்திருக்கை நன்றே"

என்கின்றார் அதிவீரராமபாண்டியர்.

ஆண்மை நிறைந்த அரும்புதல்வர்கள் நாட்டுக்கு அணிகலன்கள். உண்டு உடுத்து உறங்கி உலாவி வறிதே கழியும் அசட்டுப் பிள்ளைகளைப் பெறக்கூடாது. குந்தி நன்மக்களைப் பெற்றாள் என்று கேட்ட மாத்திரத்தில் சிறிது பொறாமை கொண்ட காந்தாரி வயிறு புடைத்து நூறு பிள்ளைகளைப் பெற்றாள். நாடு நகரம் அரசகுலம் அறத்தின் நலம் அனைத்தும் அழிந்து ஒழிந்தன.

நலமல்லாத பல மக்களைப் பெறுதலினும், பெருமையுடைய ஒருமகனைப் பெற்றால் போதும். பன்றி பல குட்டிகளைப் போடும். என்னபயன்? அரச பவனிக்கு அவை யுதவுமா? ஆனை ஒரே கன்றை யீனும். அரசன் ஊர்ந்து பவனி வருவான். யானை போர்க்குரித்தாக நின்று உதவும்.

தந்தையின் கடன்

பெற்ற பிள்ளைகளுக்குத் தந்தை செய்யுங் கடன் யாது? நிலம் புலம் பொன் பொருள் முதலியவைகளைக் குவித்து மகனுக்கு வைப்பது கடனாகாது. அவனைக் கல்வி கேள்விகளில் பெரியவனாகச் செய்து ஆன்றோர் மதிக்குஞ் சான்றோனாகச் செய்வது தந்தையின் தலையாய கடன்.

> தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
> முந்தி யிருப்பச் செயல். —திருக்குறள்.

கல்வி கேள்வி ஒழுக்கம் உடையாரைப் பெரியோர் வாழும் சபைகளில் முன் வரிசையில் இருத்திச் சிறப்புச் செய்வார்கள்.

கலைஞன் கடன்

சான்றாண்மையும் போராண்மையும் பூண்ட வீரமகனுக்குப் போர்க் கருவிகளை நல்ல முறையில் செய்து கொடுப்பது படைக் கலங்களைப் புரியும் கொல்லனாகிய கலைஞனுடைய கடமை யாகும்.

நாட்டைப் பகைவர் கவராது காத்து நிற்கவேண்டும். அவ் வண்ணங் காக்கப் படைவலிமை வேண்டும். படைக்கலங்கள் உறுதியாக இருக்கவேண்டும். வெல்லுவது வேல். ஆதலினால் தொழிலாளர் வேல்வடித்துத் தருவது இன்றியமையாத கடனாகின்றது

காவலன் கடன்

நாட்டை யாளும் மன்னவனுடைய கடமை யாது? வரிப் பணம் வசூலித்து சாலை யமைப்பதும், அணைகள் அமைத்து பாசன வசதி செய்வதும் மட்டுமன்று. அவைகள் அனைத்தும் தேவை யென்றாலும், மக்களின் பண்பாடுதான் மிகமிக உயர்ந்தது. ஆதலின் மக்களை நன்னெறி நிறுத்தி அறங் குன்றாத வகையில் அவர்கள் நடக்குமாறு புரிதலே மன்னவனது கடமை யாகும்.

காளையின் கடன்

தாய் தந்தை கலைஞன் வேந்தன் இத்தனைப் பேர்களுடைய கடமைகள் முடிந்த பின் மைந்தனுடைய கடன் என்ன? பேராண்மையும் போராண்மையும் உடையவனாய், அஞ்சா நெஞ்சனாய் விளங்கி, தான் பிறந்த தாய் நாட்டினைக் காக்கும் வகையில் பணிபுரிதல் வேண்டும். போர் வருமாயின் யானையைக் கொன்று வெற்றிமாலை புனைந்து மீளுதல் வேண்டும். அது அவனுடைய கடமையாகும்.

இந்த இனிய கருத்துக்களைத் தெளிவாக வடித்துப் படைத்தவர் பொன்முடியார் என்ற ஒரு தமிழணங்கு. அவர் அரசர்கள்

மெச்சும் அறிவாற்றல் பெற்றவர். ' இந்த அம்மையின் பாடலைக் காண்க.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

—புறநானூறு. 312

கவியின்பம்

காரைக்காலம்மையாரை உலகம் நன்கு அறியும் அவர்கள் சிறந்த சிவபக்தி பூண்டவர். அது மட்டுமன்று; தமிழறிவில் தலை சிறந்தவர். திருஞானசம்பந்தருக்கு முந்தி வாழ்ந்தவர். முதல் முதல் தேவாரப் பதிகம் பாடியவர் அவரேயாகும். அவர் பாடிய இரு பதிகங்கட்கு மூத்த திருப்பதிகம் என்று பேர்.

இவர் நான்கு நூல்கள் செய்துள்ளார் மூத்த திருப்பதிகங்கள் இரண்டு. அற்புதத் திருவந்தாதி ஒன்று. இரட்டை மணிமாலை ஒன்று. ஆக நான்கு.

எத்தனையோ பெரும்புலவர்கள் அந்தாதி நூல்களைச் செய்துள்ளார்கள். முடிவே முதலாக வைத்துப் பாடுவது அந்தாதி. கந்தரந்தாதி, பழமலையந்தாதி, திருவரங்கத் தந்தாதி என்பனவாதி எண்ணற்ற அந்தாதி நூல்கள் உண்டு.

அற்புதம் திரு என்ற இரு அடைமொழி பெற்ற அந்தாதி அம்மையார் பாடிய அந்தாதியேயாகும். அற்புதத் திருவந்தாதி எனப்படும் அந்நூல் வெறுந் துதிநூல் மட்டுமன்று. செய்யுள் நயஞ் சிறந்ததுமாகும். ஒரு பாடலைப் பாருங்கள். பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்க்கின்றூர்கள். ஸ்தாலீபுலாக நியாயம் என்பர் வடமொழியில்.

சிவபெருமானுடைய திருமுடியில் பிறைமதி திகழ்கின்றது. அது வளைந்து வெண்மையாகவும் அழகாகவும் விளங்குகின்றது. திருமால் வராக அவதாரம் எடுத்தபோது. அதன் கொம்பினைச் சிவபெருமான் ஒரு அணிகலமாகத் திருமார்பில் தரித்துக் கொண்டார்.

"பன்றியங் கொம்புகம டம்புயங் கஞ்சூர்கள்
பண்டையென் பங்கமணி பவர்சேயே" —திருப்புகழ்.

சிவபெருமான் பாம்புகளை அணிகலன்களாக அணிந்துள்ளார், பாம்புக்குப் பகை சந்திரன். அப்பாம்புகளுள் ஒரு குட்டிப் பாம்பு, நிலாவைப் பற்ற வேண்டும் என்று எண்ணிற்று. அந்தப் பாம்புக்குத் தெளிவு குறைவு. திருமார்பில் உள்ள அழகும்

வளைவும் வெண்மையும் உடைய பன்றிக்கொம்பைப் பார்த்து இதுதான் நிலா என்று ஒருநாள் நினைத்தது; மறுநாள் திருமுடியில் உள்ள பிறைச் சந்திரனைப் பார்த்து இதுதான் நிலா என்று நினைத்தது. "சே! நாம் நினைத்தது பிழை. இது பன்றிக் கொம்பு. மார்பில் உள்ளதுதான் பிறைமதி என்றும், மற்றொரு நாள் இல்லை; இல்லை; மார்பில் உள்ளது ஏனக்கொம்பு; முடியில் உள்ளதுதான் பிறைமதி என்றும், இப்படி தினந்தினம் மாறி மாறி எது மதி, எது கொம்பு என்று இன்றுவரை நிச்சயிக்க முடியாமல் மயங்கி நிற்கின்றது." என்று ஒரு பாடல் பாடியுள்ளார்கள். "புலவர்க்கு வெண்பாப் புலி". வெண்பாவில் இக் கருத்தை யமைத்துப் பாடியது அற்புதந்தானே.

திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும்—ஒருநாள்
இதுமதியென் றென்றுக இன்றளவுந் தேரா
ததுமதியொன் றில்லா அரா.

இறைவன் எங்குள்ளான் என்று வினவிய வினவுக்கு அம்மையார் தெளிவாகத் தீந்தமிழ்ப் பாவால் தீட்டுகின்றார்.

வானத்தான் என்பாரும் என்கமற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாம்என்க—ஞானத்தான்
முன்னஞ்சத் தால்இருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தான்என்பன் யான்.

முள்ளில் ரோஜா என்பதுபோல். இருளில் ஒளி என்று முரண்தொடையாக அமைத்து மூன்றாவது வரியில் நஞ்சால் இருண்ட கண்டத்தில் அமரரை வாழ்விக்கும் ஒளி வீசுகின்றது என்று கூறும் நயம் நனிபேருவகை தருகின்றது. மிகச் சிறந்த கவிநயம்.

அம்மையார் பாடலில் வீர வுணர்ச்சியும் பொங்கி யெழுகின்றது. இதோ பாருங்கள்.

காலனையும் வென்றோம் கடுநரகங் கைகழன்றோம்
மேலை யிருவினையும் வேரறுத்தோம்—கோல
அரணார் அவிந்தொழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து.

ஆண்டாள்

ஆண்டாளம்மையாருடைய பாடல்கள் அமுத மயமாக இருக்கும். அவர் பாடல்களில் அன்பு கனிந்து வெள்ளமாக ஓடும். அவற்றில் கவிநயம் களிநடம் புரியும்.

திருமாலை ஆண்டாளம்மையார் அருட் கண்ணால் பார்க்கின்றார். நீலமலைபோல் எழில்பெற நிற்கின்றான் நிமலன். அப்பெருமானுடைய கரமலர்மீது தூய வெண்சங்கம் மிகப் புனிதமாக விளங்குகின்றது; அது நாத தத்துவம். ஓங்கார ஒலியை உண்டாக்கி உலகங்களுக்கெல்லாம் உவகையை யூட்டுவது.

இந்த நற்காட்சியைக் கண்ட நாச்சியாருக்கு இயற்கை எழில் நினைவுக்கு வருகின்றது. அழகிய ஒரு மலை; குளிர்ந்த மலை; அது பச்சைப்பசேல் என்று காட்சி தருகின்றது. அம் மரகத மலைமீது அஷ்டமி திதியிலே தோன்றுகின்ற அர்த்த சந்திரன் தோன்றுகின்ருன். அதுபோல் இருக்கின்றதாம் அந்த அரிய காட்சி, பச்சைமா மலைபோல் நின்ற பவளவாய்க் கமலக் கண்ணனுடைய திருக் கரத்தில் வெண்சங்கம் வீற்றிருப்பது, சங்கம் பாதிமதிபோல் பாங்குபெறுகின்றது. இக் கருத்தமைந்த பாடலினைப் பாருங்கள்.

தடவரையின் மீதே சரற்கால சந்திரன்
இடையுவாவில் வந்து எழுந்தாலே போலநீயும்
வடமதுரை யார் மன்னன் வாசுதேவன் கையில்
குடியேறி வீற்றிருந்தாய் கோலப்பெருஞ் சங்கே.

மேலும் வெண்சங்கு நீலக்கோலமேனியானுடைய தாமரை போன்ற சிவந்த திருக்கரத்தில் இருப்பது, குளிர்ந்த கரிய நீர்நிலையில் சிவந்த தாமரையில் வெளிய அன்னம் வீற்றிருந்து தாமரைத் தேனை நுகருமாப்போல் இருக்கின்றதாம். என்ன அழகிய உவமை? ஆ! ஆ! உள்ளத்தை அள்ளுகின்றது.

கருங்குளம் – திருமால். சிவந்த தாமரை - கரதலம்,
வெண்மை யன்னம் – பாஞ்சசன்ய சங்கம்.
என்ன நிறபேதம்? வர்ணசாலம் என்பர் வடமொழியில்.

செங்கமல நாண்மலர்மேல் தேன்நுகரும் அன்னம்போல்
செங்கண் கருமேனி வாசுதேவனுடைய
அங்கைத் தலமேறி அன்னவசஞ் செய்யும்
சங்கரையா! உன் செல்வம் சால அழகியதே.

ஒரு பணிப்பெண்

கம்பநாடர் வீட்டில் குற்றேவல் புரியும் ஒரு பணிப்பெண். கம்பர் வீட்டுக் கட்டுத்தறியுங் கவிபாடும் என்பது பழமொழி. ஆதலினுல் கம்பநாடருடைய திருமாளிகையில் பணிபல புரியும் பாவைக்குத் தமிழறிவும் கவிபுனையுங் கலைநிறைவுந் தானே அமையுந்தானே.

தேரழுந்தூரில் கம்பர் கவிச்சக்கிரவர்த்தி வீற்றிருக்கின்ருர். அவருடைய மாளிகைக்கு அருகில் அப்பணிப்பெண் சாணத்தைப் பிசைந்து உருட்டி வரட்டி தட்டிக்கொண்டிருந்தாள். தேன்மலரை நாடித் தூரதூரங்களில் இருந்து வண்டுகள் வருவதுபோல், கம்பர் பெருமானுடைய அமுதவாக்கில் இருந்து வழியும் தமிழ்த்தேனை நுகர்தற் பொருட்டு, தமிழார்வம்படைத்த புலவர்களும் புரவலர்களும் தனவந்தர்களும் சதா வந்த வண்ணம் இருப்பார்கள்.

ஒருநாள் அம்பல சோமாஜி என்ற புலவர் மெல்ல வந்தார். அவர் புதியவர். கவிச்சக்கிரவர்த்தியைக் காணவேண்டும் என்ற ஆவல் அதிகம். அவரைச் சந்திப்பதில் தகுதிநோக்கி அச்சம்

ஒருபுறம் வந்த புலவர் சாணந்தட்டும் பெண்மணியைப் பார்த்து "அம்மா! கல்விக்கடலான கம்பர் வீடு எது?" என்று கேட்டார். அவள் புன்னகை புரிந்து, "ஐயா! இதோ இந்த வீடுதான் எங்கள் எஜமானுடையது. உள்ளே யிருக்கின்றார். இப்போது பார்க்கலாம். புலவர் பலருடன் கலா விநோதம் புரிந்துகொண்டிருக்கின்றார். அவர் பரம தயாளமூர்த்தி, யாரும் பார்க்கலாம். அன்பாகப் பழகுவார். போய்ப் பார்த்துக் கலையின்பத்தை நுகருங்கள்; வணக்கம்" என்றாள்.

புலவருக்கு அப்பூவையின் சொற்கள் மிக்க மகிழ்ச்சியைத் தந்தன, "கம்பர் வீடு எது? என்று நாம் ஒரு கேள்வியைக் கேட்டோம். இந்தப் பெண் ஒன்பது வண்ணமாக விடை கூறுகின்றாள். ஆ! ஆ! கம்பர் வீட்டு வேலைக்காரி என்றால் அதற்குத் தக்க பண்புதானே அமைந்துளது. இவள்பால் அழகு அடக்கம் அறிவு பேசுந்திறம் எல்லாம் ஒருங்கே அமைந்திருக்கின்றன" என்று எண்ணி வியப்புற்றார்.

"அம்மா! தாங்கள் கம்பரிடம் தமிழ் பயின்றிருக்கின்றீரா?"

"ஐயா! எனக்குத் தமிழ் பயில நேரம் ஏது? குறிப்பறிந்து குற்றேவல் செய்வதிலேயே நேரம் முழுவதும் கழிகின்றது. தாங்கள் புலவர்போல் காணுகின்றீர். ஒரு வினா வினவுகின்றேன் விடைகூறும். தங்கள் பேர் யாது?"

"அம்மணி/ என் பேர் அம்பல சோமாஜீ"

"ஐயா/ வட்டமாகச் சந்திரனைப்போல இருக்கும்; அதன்மீது வன்னிக்கொடி தாவிப் படரும், அது தன்னைக் கொட்டுவார்கள் கையில் கூத்தாட நிற்கும். சுட்டபின் அதனை எடுத்துச் "சிவ சிவ" என்பார்கள்; இத்தகைய பொருள் எது? ஒருநாள் தவணை தருகின்றேன். கூறும்" என்றாள். வசனமாகவா கூறினாள்? கம்பரின் பணிப்பெண் அல்லவா? பாட்டுக்கு என்ன பஞ்சம்.

வட்டமதி போலிருக்கும் வன்னிக் கொடிதாவும்
கொட்டுவார் கையினின்று கூத்தாடும்—சுட்டால்
அரகரா என்னுமே அம்பலசோ மாஜீ!
ஒருநாள்விட் டேன்உ துரை.

புலவருக்கு ஒன்றும் புரியவில்லை. விரள விரள விழித்தார். மேலும் கீழும் பார்த்தார். உடல் வேர்த்தார். அச் சமயம் தற்செயலாகக் கம்பர் வெளியே வந்தார். புதுப் புலவரைப் பார்த்து, "ஐயா! வாருங்கள்; தங்கட்கு நல்வரவு; உள்ளே வந்து இருங்கள்" என்று பரிந்து அழைத்தார். அவரை அமரச் செய்து நீர் மோர் பானகந் தந்தார். நலந்தானே என்று நலம் வினவினார்.

"நற்றாமரைக் கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்"

என்ற பாடலுக்குக் கம்பர் இலக்கியமாக இலங்கினார். புலவர் கம்பருடைய பெருமை, அவருடைய கருணையின் எளிமை'

உபசரிக்கின்ற அருமை, அவருடைய பணிப் பெண்ணுக்கு இருக்கும் கவித்திறம் ஆகிய இவைகளை மாறி மாறி மனத்துள் நினைத்தார். வியப்பும் மகிழ்ச்சியும், பாடலுக்கு உரை தெரியாத தால் நாணமும் அடைந்தார்.

கம்பர் "புலவரே! தாங்கள் ஏதோ ஒன்றை நினைத்துச் சிந்திக் கின்றதுப்போல் தோன்றுகின்றது. அதனைச் சொல்லலாம் என் றால் சொல்லுங்கள்" என்றார், புலவர் பணிப்பெண் கூறிய பாட லைக் கூறி இதற்குப் பொருள் விளங்கவில்லை என்றார்.

ஓ! அவள் ஒரு வேடிக்கைக்காரி; அவள் தன்வாய்வளத்தை உம்மிடமும் காட்டி விட்டாளா? அது வேறு ஒன்றுமில்லை; அவள் நீர் காணும்போது என்ன செய்துகொண்டிருந்தாள்? சாணத்தைப் பிசைந்து வரட்டி தட்டிக்கொண்டிருந்தாள். அது தான் அது.

வரட்டி வட்டமதிபோல் வட்டமாக இருக்கும். வன்னிக் கொடிதாவும் - வன்னி – நெருப்பு. நெருப்பில் வேகும். தன்னைக் கொட்டுபவர் கையில் இருந்து கூத்தாடும், வரட்டியைச் சுட்ட பின் திருநீறு ஆகும். அதனை எடுத்து ஹர ஹர என்று நெற்றியில் அன்பர்கள் அணிந்து கொள்வார்கள். என்று எளிதாகக் கம்பர் கூறினார். புலவர் வியந்து கேட்டுப் பணிப்பெண்ணின் பாடல் திறத்தைப் பாராட்டினார், அங்குள்ள அனைவருமே மகிழ்ந்து புன் முறுவல் பூத்தார்கள்.

பெண்ணின் பெருமிதம்

ஏகம்பவாணன் என்ற பெருஞ் செல்வச் சீமானுடைய மனைவியார் கலைநலம் பெற்ற காரிகை.

சேர சோழ பாண்டியர்கள் அப் பெருநிலக்கிழாரைக் காண வந்தார்கள். அப்போது ஏகம்பவாணர் வயல்களைக் காணச் சென் றிருந்தார்.

'பார்த்துக் கெட்டது பிள்ளை, பார்க்காமல் கெட்டது பயிர்' என்பது பழமொழி. பிள்ளைகள் தவறு செய்யும்போது தயவு தாட்சண்யம் பார்த்துக் கண்டிக்காதிருந்தால் அப்பிள்ளைகள் உருப் படாது. சோம்பலால் வயலுக்குச் சென்று பாராதிருந்தால் பயிர் வளம்பெறாது. ஏகம்பவாணருடைய மனைவி தமது பாங்கிகளுடன் மூவேந்தரையும் வரவேற்றுஇருக்கச்செய்தாள். முதலியார் எங்கே என்றார்கள் முடியுடைமன்னர்கள்; அவர்வயலிடம் சென்றுளார். சிறிது நேரத்தில் வரக்கூடும்" என்றாள் ஏகம்பவாணருடைய இல் லக் கிழத்தி. மூவேந்தரும் சற்று அவமதிப்பாக "ஓகோ! நாற்று முடி நடப்போனாரோ! ஏரோட்டிதானே" என்று கூறினார்கள்.

இதனைக் கேட்ட அம்மைக்குச் சீற்றம் பொங்கி யெழுந்தது, "மன்னர்களே! தேரோட்டித் திரியுந் தேச மன்னர்கள் சிறப் பாக வாழ்வதற்கு மூலம் ஏரோட்டி விளைவு செய்வதுதான். என் கணவனார் நாற்று முடிமட்டும் நடுபவரன்று; சேனைகளைத்

தழையாகச் செய்து எருப்போட்டு, உதிரநீர் பாய்ச்சி, ஆனை மிதித்த ஆழமான சேற்றிலே மூவேந்தருடைய முடித்தலைகளை யும் பறித்து நடும் பேராற்றல் படைத்தவர்'' என்று ஒரு அழகிய வெண்பாவை வீரக்கனல் சிந்த விளம்பினாள்.

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனைமிதித்த அருஞ்சேற்றில்—மானபரன்
பாவேந்தர் வேந்தன் பறித்துநட்டான் ஏகம்பன்
மூவேந்தர் தங்கள் முடி.

இப் பாடலைக் கேட்ட மூவேந்தர்களும் நாணி, அம்மை யாரை இறைஞ்சி மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள்.

இவ்வாறு மன்னவரையும் மதிகலங்கப் பாடும் மாண்பு அம் மாதரசிக்கு இயல்பாக அமைந்திருந்தது. என்னே பெண் ணரசியின் பெற்றி? பெருமிதமான வெற்றி; எல்லாம் இப் பாடலில் துள்ளி விளையாடுகின்றன.

பதினாறும் நூற்றாண்டில் வரதுங்கராமர், அதிவீரராம பாண்டியர் என்று இருபெரும் புலவர்கள்பாண்டிநாட்டை அரசு புரிந்தார்கள். இருவரும் சகோதரர்கள். அநேக நூல்கள் பாடி யுள்ளார்கள், பிரமோத்தர காண்டம் முதலிய நூல்களைச் செய்த வர் வரதுங்கராமர்; கூர்மபுராணம், மச்சபுராணம், காசிகாண்டம், கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, நைடதம், நறுந்தொகை முதலிய பல நூல்கள் இயற்றியவர் அதிவீரராமர்.

இருவர்கட்கும் ஒரு சமயம் மனமாற்றம் ஏற்பட்டு போர்க் களத்தில் போர்புரிய நின்றார்கள். இருவரையும் பெற்ற அன்னை ஓடிவந்தாள். இந்த பெரும் புலவர்களை ஈன்ற அன்னைக்கு எத் துணை அறிவாற்றல் இருந்திருக்கும்? அவள் விரைந்து வந்து மைந்தர் இருவரின் இடையே நின்று,

“மக்காள்! இது உடன் பிறந்த உமக்கு உரிய பண்பன்று; கர்ணனையும் இராவணனையும் தனஞ்சயனையும் பார்க்காதீர்கள். பரதனையும் ராமனையும் பாருங்கள். அதுதான் சிறந்த பண்பு'' என்று ஒரு பாடல் பாடி ஆறுதல் செய்தாள்.

“செஞ்சுடரின் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்.

இவ்வண்ணம் நமது தமிழ் நாட்டில் தமிழ் நூற்புலமையும் கற்புநெறித் தலைமையும் பூண்ட பெண்கள் பலர் வாழ்ந்தார்கள். அவர்களால் நாடு நலம் பெற்றது. வீடு விளக்கமுற்றது. ஆதலின் இளம் பெண்மணிகள் கற்கவேண்டிய அறநூல் அறிவுநூல் முதலியவைகளைக் கற்றுப் பண்டைப் பெருமையைப் புதுப்பிக்க வேண்டும். மனதை மாசு படுத்தும் பயனில்லாத சுவடிகளைப் படித்தல் பண்பாகாது. பண்பும் தமிழன்பும் பாவையரும் வளம் பெறுக.

இது அழகோ ?

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்.

தன் மகளைத் தாய் பார்த்தாள். அவள் வாட்டமுற்றுக் கிடந்தாள். மான்குட்டி போலத் துள்ளி விளையாடிச் சிரிப்பும் பாட்டுமாகக் கலகலப்பாக இருக்கும் பெண் அவள். இப்போது ஏக்கமே உருவமாகச் சோர்ந்து கிடக்கிறாள். ஊரெல்லாம் பாராட்டும் குணம் நிறைந்தவள் அவள். அழகுக்குத்தான் குறைவா? அவளுடைய கூந்தல் நீலமணிபோல இருக்கும்; சுருள் சுருளாக இருக்கும். இப்போது அதை வாரிக்கொள்ள நினையாமல் கிடக்கிறாள் அவள். அவள் வாய் கொவ்வைக் கனிபோல இருக்கிறது. அவள் என்ன நினைந்து வருந்துகிறாளோ? அவள் படும் இடரைத் தாயினால் நன்கு அறிய முடியாது. ஆனால் அந்தப் பெருமான் அறிய முடியாதா? இப்படிக் கவனிக்காமலிருப்பது அவனுக்கு அழகா?

அவன் மக்களுடைய இடரைக் கவனிக்காமல் இருப்பவன் அல்லவே! பேசாமல் சுகமாகக் கந்தலோகத்திலே இருந்துவிடலாம் அவன். அப்படி இருந்தால் பலருக்குப் பயன் விளையாமல் போய்விடும். யாவரும் உய்யவேண்டுமானால் அவர்கள் காண அருகில் வந்து வாழவேண்டும். அவன் அப்படிச் செய்கிறான்.

உலகில் உள்ளவர்கள் வாழவேண்டுமானால் அவர்களுக்கு வேண்டிய மழை, காற்று, தீ முதலியனவெல்லாம் வேண்டிய போது வேண்டிய அளவு கிடைக்கவேண்டும். அவற்றை வழங்கும் சக்தி உடையவர்களே தேவர்கள். அரசாங்க அதிகாரிகள் மக்களுக்கு நலம் செய்வார்கள். அவர்களுக்கு மாதந்தோறும் அரசாங்கத்தில் சம்பளம் கிடைக்கிறது. அந்தச் சம்பளத்தை அவர்களுக்குக் கொடுப்பதை நிறுத்திவிட்டால் அவர்கள் வேலை செய்யமாட்டார்கள். அதுபோல இறைவனுடைய அரசாங்கத்தில் அமரர்கள் மக்களுக்கு நலம் செய்யும் அதிகாரிகள். அவர்களுக்கு மறையவர்கள் அக்கினி காரியம் செய்து ஆகுதி கொடுத்து உணவளிக்கிறார்கள். வேள்வித்தீ எழுப்பி நெய்யும் அவியும் சொரிந்து தேவர்களை வழிபட்டு அவர்களைத் திருப்திப்படுத்துகிறார்கள். அவர்கள் செய்யும் வேள்விகளால் தேவர்கள் மகிழ்ந்து உலகம் வாழத் தாம் செய்ய வேண்டியவற்றைச் செய்கிறார்கள்.

வேள்வி செய்யும் அந்தணர்கள் நீர் நாண நெய் சொரிந்து தீ வேட்கிறார்கள். அவர் கையும் உடலும் நெய் மணக்கின்றன. அந்த மணத்தை அணிந்த மறையோரை முருகன் காப்பாற்றுகிறான். ''அந்தணர் வெறுக்கை'' என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது. முருகன் தானே இவ்வுலகிற்கு வந்து மூர்த்திகரித்து ஆலயங்களில் எழுந்தருளியிருக்கிறான், அவனை வணங்கி வேள்வி செய்து வாழ்கிறார்கள் அந்தணர்கள். அவர்கள் வாழ, வேள்வி மல்குகிறது. அதனால் தேவர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் வாழ, மழை காலத்தில் பெய்கிறது; காற்றுப் பருவத்தில் வீசுகிறது. அதனால் வையத்திலுள்ள மக்கள் வாழ்கிறார்கள்.

இவ்வளவும் ஒன்றை ஒன்று தொடர்ந்து நடைபெறுகின்றன. முருகன் பூவுலகில் திருவிடைக்கழியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பதனால் நெய்மணத்தை அணியும் மறையோர் உய்கிறார்கள்; அவர்களால் ஆகுதி பெறும் வானவர் உய்கிறார்கள்; அவர்களால் வையம் உய்கிறது. அதுமட்டோ? அந்தத் தாய் வாழுவதே முருகப்பெருமான் திருவருளால்தானே? தன் மகளைப் புறக்கணித்துவிட்டான் என்பதற்காக உண்மையை மறைத்துப் பேசலாமா? அந்தப் பெருமான் நம் அருகே வந்து எழுந்தருளியிருக்கிறான் என்ற தைரியத்தால் அந்தத் தாய் எத்தனையோ இடர்ப்பாடுகளை வென்றிருக்கிறாள். அதை எளிதில் மறக்கமுடியுமா?

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படும்இடர் குறிக்கொளா தழகோ?
மணம்அணி மறையோர் வானவர் வையம்
உய்யமற்று அடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற...

இவ்வாறெல்லாம் எண்ணுகின்றாள் முருகனிடம் காதல் பூண்ட மங்கையின் தாய்.

திருவிடைக்கழியில் குராமரத்தினடியில் எழுந்தருளி யிருக்கும் முருகன் தனக்கு வேறு இடம் இல்லாமையினாலா அங்கே வந்திருக்கிறான்? அன்று, அன்று; உலகம் உய்யவேண்டும் என்று வந்திருக்கிறான். வந்து கோயில்கொண்ட இடம் தாழ்ந்ததா? உறுதியான, திண்ணமான, மணி மாடங்கள் உள்ள அழகிய ஊர் திருவிடைக்கழி; மறையோரும் பிறரும் அவற்றில் வாழ்கின்றார்கள்; அங்கே தனக்கும் ஓர் இருக்கையைக்கொண்டு உறைகிறான் முருகன்; நல்ல மரநிழல் அடர்ந்தஇடத்தில்எழுந்தருளியிருக்கிறான்.

மனிதர்கள் வாழும் இந்த இடத்தில் வந்து தங்கி யிருப்பது, அவனுடைய கருணையினாலே. பெரிய மனிதர்களை உறவாகப் பெற்றவர்கள் தமக்கு ஒரு பெருமை இல்லாவிட்டாலும், அந்த உறவினர்களின் பெருமையை நினைந்து செருக்கடைவது உலக இயல்பு. முருகன் எவ்வளவோ உயர்ந்தவன்; உயர்ந்த உறவினர்களைப் பெற்றவன்; அத்தகையவன் இங்கேவந்து நம்மோடு ஒருவனாக வாழ்கிறான். எவ்வளவு எளிய பண்பு!

அவன் உறவினர்கள் யார் தெரியுமா? கங்காதேவியின் குமரன் அவன்; காங்கேயன் என்பது அவன் பெயர்களில் ஒன்று. அவனைத் தன் அலைக்கரங்களால் தாங்கிப் பெருமிதமும் மகிழ்ச்சியும் கொண்டவள் கங்கை, கங்கை தூய்மைக்கு உறைவிடம். கங்கையின் நீர் பளிங்குபோலத் தூயது. கூட்டமாகப் பளிங்கு கிடந்தால் எப்படி இருக்கும்; அப்படி உள்ளது கங்கையின் நீர்; அத்தகைய கங்கையன்னையின் புதல்வன் முருகன்.

எப்போதும் பெருங் கூட்டத்தின் நடுவே இருப்பவன் கண பதி. எத்தகைய தடைகளையும்போக்கி எடுத்த காரியத்தில் வெற்றி உண்டாகச் செய்பவன். அவனை வணங்காதவர் யாரும் இல்லை. அத்தகைய பெருமானுக்குப் பின் வந்த தம்பி இப்பெருமான்.

இவ்வளவு சிறந்த அண்ணல், உலகத்தினர் வாழ உலகில் வந்து இக் கோயிலில் வாழ்கிறான். அவன் கருணையை அளவிட முடியுமா? மறையோர் உய்ய, வானவர் உய்ய, வையம் உய்ய — ஏன், இந்தத் தாயே வாழ — வந்து எழுந்தருளிய வள்ளல், இந்த மடந்தைக்கு உண்டான இடரை எண்ணாமல் இருக்கலாமா? எங்கோ இருப்பவன். ஆதலால் தெரியாது என்றுசொல்ல வகை யில்லை. அவன் எங்கே யிருப்பினும் அறியாதது ஒன்றும் இல்லை; இங்கே அருகிலேயே எழுந்தருளி யிருக்கிறான்.

தன்னால் யாவரும் வாழ்வுபெற வேண்டும் என்று இறங்கி வந்தவன் ஓர் இளம்பெண் வாழ்வு பெறாமல் ஏங்குகிறாள் என் பதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா? இது அவனுக்கு அழகா? தாயின் சிந்தனை இவ்வாறெல்லாம் படர்ந்தது.

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படும்இடர் குறிக்கொளா தழகோ?
மணம்அணி மறையோர் வானவர் வையம்
உய்யமற்று அடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கிழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்,
கணபதி பின்இளங் கிளையே.

[நெய்மணத்தைக் கொண்ட மறையோரும் வானவரும் உலகில் உள்ளவரும் உயிர் பிழைக்க, அடியனேன் வாழ, உறுதியான மணிகளா லான மாடங்களை யுடைய திருவிடைக்கழியில், அழகிய குராமரத்தின் நிழலின்கீழ் எழுந்தருளிய, கூட்டமான பளிங்கை ஒத்த நீரையுடைய கங்கையின் புதல்வன், கணபதிக்குப் பின் வந்த தம்பி, குணத்தையும், நீலமணிபோன்ற சுருண்ட கூந்தலையும், கொவ்வைக் கனிபோன்ற வாயை யும் உடைய இந்தப் பெண் படுகின்ற துன்பத்தைத் திருவுள்ளத்தில் கொள்ளாமல் இருப்பது அழகாகுமா?

குணமடந்தை, மணிக்குருளை மடந்தை, கொவ்வை வாய் மடந்தை என்று கூட்டிக்கொள்ள வேண்டும். மணி - நீலமணி. குருளை - சுருண்ட கூந்தல்; மடந்தை என்பது பருவத்தைக் குறியாமல் பெண்ணென்னுந் துணையாய் நின்றது. குறிக்கொளாதது என்றது செய்யுள் விகாரத்தால் குறைந்து நின்றது மணம் அணி - நெய் முதலியவற்றின் மணத்தைப் பெற்ற. வையம் - உலகத்திலுள்ளோர்; ஆகு பெயர், மற்று: அசைநிலை. அடியனேன் என்றது தாய் தன்னையே கூறிக்கொண்டது, திணம் - திண் ணம்; இடைக்குறை; உறுதி யென்னும் பொருள் உடையது. மணி - நீல மணி, மாணிக்கம் முதலிய மணிகள், கணம் — கூட்டம், மணிபொரு - பளிங்கை ஒத்த; கங்கையின் நீர் வெண்மையானது, இளங்கிளை - தம்பி,]

திருவிடைக்கழித் திருவிசைப்பாவில் 5-ஆவது திருப்பாட்டு.